மணி வரையில் மீண்டும் பேச்சு வார்த்தை நடந்தது. நான் இந்தக் கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினேன். ஐ.என்.டி.யூ.சி. தலைவர்களில் ஒருவரான திரு. பழனியாண்டி அவர்களை அழைத்து ஒத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இன்று மாலை 3 மணிக்கு மீண்டும் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

(இ) டன்லப் தொழிற்சாலையில் கலவரம் குறித்து.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். 22-ம் தேதி இரவு டன்லப் தொழிற்சாலையில் பயங்கரமான ஒரு பெரிய கலவரம் நடந்து, இரண்டு தொழிலாளர்கள் பயங்கரமாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்கள். அதிலிருந்து டன்லப் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது. இது தொழிலாளர் பிரச்சினை மட்டுமல்ல, தொழிலாளர்களின் மனைவிமார்கள், எப்பொழுது புருஷன் வருவான், எப்பொழுது புருஷன் வருவான் என்று கேட்கும் அளவிற்குத் தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். பத்திரிகையிலும் இந்தச் செய்திகள் வரவில்லை. அரசுக்கும் இது தெரியவில்லை. இதைப்பற்றி நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். தாங்கள் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது என்னுடைய கவனத்தில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டு, அதற்கு தயாராக இருக்கும் நேரத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–20]

(ஈ) உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்களின் உறையும் தமிழில் அச்சடிக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நான் இரண்டு நாளைக்கு முன்னால் இந்த அவையிலே தமிழிலேதான் எல்லாம் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினேன். நீங்களும் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்தீர்கள். வினாக்கள் பட்டியல் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சிதான். இருந்தாலும் அந்தப் பார்வையிலே மாறுதல் கிடையாது. அந்தப் பார்வையிலே மாறுதல் இல்லாதவரை, தமிழை நாம் ஆட்சி மொழியாகக் கொண்டு வருகிறோம் என்பதில் பொருள் இல்லை. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கூடு ஆங்கிலத்திலே கொடுக்

கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, பெயரும் ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருக்கிறது. அன்று நான், ஆங்கிலத்திலே கூடு களோ, மற்றவைகளோ என் மேஜைக்கு வந்தால் கிழித்தெறி வேன் என்று சொல்லியிருக்கிறேன். தமிழ் நாட்டிலே தமிழுக்கு முன்னுரிமை வேண்டுமென்ற காரணத்தினால், எனக்கு ஆங்கிலத் தில் அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கூட்டை உங்கள் முன்னால் கிழித்தெறிகிறேன். (ஒரு கூட்டை கிழித் தெறிந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய உணர்வு களை நான் உணருகிறேன். இனி கூடுகளைத் தமிழில்தான் அச்சடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். ஏற்கனவே இப்படிப்பட்ட கூடுகள் ஆயிரக்கணக்கில் அச்சடிக்சப்பட்டிருக் கின்றன. அவை வீணாகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார் கள். இருந்தாலும், தாங்கள் என்னிடம் வந்து பேசிவிட்டுப் போன பிறகு, அதைக் கூட உபயோகிக்கக் கூடாது என்று நான் உடனே உத்தரவிட்டிருக்கிறேன். தமிழிலே அச்சடித்த கூடு களைத்தான் இனிமேல் பயன்படுத்த வேண்டுமென்று உத்தர விட்டிருக்கிறேன். ஆகவே, தாங்கள் கோபத்தோடு இருக்க வேண்டாம். மிகவும் ....

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: என் பெயர் டைப் செய்யப் பட்டிருப்பதுகூட ஆங்கிலத்திலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கோபத்தோடு இருக்க வேண்டாம். எல்லாம் படிப்படியாக தமிழிலே கொண்டு வரப்படும்.

(உ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங் கள் குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள நல்லிப்பாளையத்தில் உள்ள மிராசுதார், அங்கே மாட்டுக் கொட்டகையில் வைத்து தண்ணீரை 16 வயது அரிசனப் பெண் குடித்து விட்டாள் என்பதற்காக அடித்துக் கொலை செய்து அந்தப் பிரேதத்தை மறைத்ததாகவும் அதற்காக அங்குள்ள அரிசன மக்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று.........(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தது என்னவாயிற்று என்று கேட்டாலே போதும். பரவாயில்லை. விளக்கமாகச் சொல்லுங்கள் என் றால், அதை உரையாக இழுக்கிறீர்கள். இன்னும் அதற்கான பதில் என் கையில் வரவில்லை. அது வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.